செ.வெ.எண்:189 நாள்: 19.03.2018

"Project New wings " திட்டத்தில் பதிவு செய்த தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு தொழில் திறன் பயிற்சி வழங்க சிறப்பு முகாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

-------

" Project New wings" என்ற திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஜனவரி 26 குடியரசுதின விழாவில் தொடங்கி வைத்தார்கள். இதில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் மற்றும் அனைத்து தூய்மைப் பணியாளர்களின் நலனை மேன்மை அடையச் செய்வதே இதன் நோக்கமாகும். மேலும், தூய்மைப் பணியாளர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, அவர்களின் அடிப்படைத் தேவைகள் மருத்துவம் மற்றும் இலவச வட்ட உதவி ஆகியவைகளை பெற்றுத் தருதல் இதன் சாரம்சமாகும். ரெடிங்டன் பவுண்டேன்சன் மூலம் Project New wings திட்டத்தின் கீழ் 23 பேர் மாண்டிச்சோரி ஆசிரியர் பயிற்சி பெற்றுவருகிறார்கள். தற்பொது ICICI Sill Acadamy சார்பில் தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு தொழில் திறன் பயிற்சி அளிக்க சிறப்பு முகாம் 23.03.2018 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாமில் 8 -ம் வகுப்பிலிருந்து 12ம் வகுப்பு வரை படித்துள்ள ஆண்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளுக்கு தகுதியுள்ள பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர் (1) ரிப்ரிஜிரேஷன் மற்றும் ஏர் கண்டிஷன் பழுது நீக்கல் பயிற்சி (2) சென்ரலைஸ்டு ஏர்கண்டிஷன் பயிற்சி (3) எலெட்ரிகல் மற்றும் ஹோம் அப்ளையன்ஷன்ஸ் பழுது நீக்கல் பயிற்சி (4) இரு சக்கர மற்றும் 3 சக்கர சர்வீஸ் டெக்னீசியன் பயிற்சி (5) ஆண், பெண் இருபாலருக்கும் பம்செட் , மோட்டார் பழுது நீக்கல் பயிற்சி மற்றும், 12 ம் வகுப்புக்கு மேல் பட்டப்படிப்பு வரை படித்துள்ளவர்களுக்கு விற்பனை திறன் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சி காலமானது மூன்று மாதங்களாகும். 18 லிருந்து 30 வயதுள்ளவர்கள்

தகுதியுள்ளவர்களாவர். இந்த பயிற்சியின் முடிவில் பயிற்சி ICICI Skill Academy சார்பில் சான்றிழ்கள் வழங்கப்படும். இந்தப் பயிற்சியானது கோயமுத்தூர் மற்றும் சென்னை நகரங்களில் நடைபெறும். இந்த பயிற்சி காலங்களில் ICIC Skill academy நிறுவனத்தினரால் இலவச உணவு மற்றும் உறைவிடம் வழங்கப்படும். பயிற்சி பெறுவோர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெற்றுத்தர வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆழ்வார்குறிச்சி ஔவை இல்லத்தில் இயங்கும், ரெடிங்டன் பவுண்டேசன் பயிற்சி நிறுவனத்தில் ஐடிஐ மற்றும் டிப்ளமோ படித்த ஆண்களுக்கு சோலார் பேனல் அசெம்ளிங் மற்றும் மெயின்டனன்ஸ் பயிற்சி வழங்கப்படவுள்ளது. 18 வயது முதல் 25 வயது வரை உள்ள ஆண்கள் இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம். பயிற்சி இறுதியில் என்.எஸ்.டி.சி - தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியின் போது மதிய உணவு வழங்கப்படும். New Wings திட்டத்தில் பதிவு செய்துள்ள துாய்மை பணியாளர்களின் குழந்தைகள் இந்த சிறப்பு முகாமில் பங்கெடுத்து பயிற்சிகளில் சேர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சிறப்பு முகாமிற்கு வரும் பொழுது கல்வி தகுதிச் சான்றிதழ்கள், இரண்டு பாஸ்போட் அளவு புகைப்படம், ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்து வர வேண்டும். தேவைக்கு அதிக பயிற்சியாளர்கள் வரப்பெற்றால் தகுதியான பயிற்சியாளர்கள் நுழைவு தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். இந்த சிறப்பு முகாம் 23.03.2018 திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் மாலை 03.00 மணிக்கு நடைபெறும். New Wings திட்டத்தில் பதிவு செய்துள்ள துாய்மை பணியாளர்களின் குழந்தைகள் தொழில் திறன் வசதிகளைப் பெற்று மாற்று வேலைவாய்ப்புகளை ஏற்று வாழ்வில் உயர மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்துாரி, இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு.:- செய்தி மக்கள் தொடர்பு துறை

திருநெல்வேலி.